மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதற்கு மாருக தமிழ் நாட்டில் இருப்பது போல் அந்த மாவட்டத்திலும் புகுத்த அரசாங்கம் யோசனை செய்து கொண்டிருக்கிறது.

'ஸ்ரீ' க்குப் பதில் 'திரு'.

* 229 வின.—திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஊர் பெயர்களில் 'ஸ்ரீ'க்குப் பதிலாகத் 'திரு'வைப் பயன்படுத்த அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. கா. காளிமுத்து: ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரசபையிலுள்ள காமராஜ் காங்கிரஸ் கட்சியினர் உட்பட அனைவரும் ஏகமனதாக திருவில்லிப்புத்தூர் என்று பெயரை மாற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிருர்கள். அந்த ஊர் பெயரை திருவில்லிப்புத்தூர் என்று மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுபற்றி நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறது. மத்திய அரசு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் ஸ்ரீவில்லிப்புத்தூர் என்ற பெயரே இருக்கட்டும் என்று கூறியிருக்கிருர்கள். அரசு தமிழ் வளர்ச்சித் துறையைக் கலந்து முடிவு எடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஊர்களுடைய பெயர்களை மாற்றும்போது அந்த ஊர் மக்களுடைய எண்ணம் என்ன என்பதை அறிய வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா? முனிசிபாலிடியோ, பஞ்சாயத்தோ தீர்மானம் செய்தாலும் ஊர் மக்களின் எண்ணத்தையும் அறிந்து பெயர் மாற்றப்படுமா? இன்று பரங்கிமலை என்று இருப்பது பிருங்கமாமலை என்ற பழம் பெயராக இருந்தது. இப்போது ஆங்கிலப் பெயரைத் தமிழ்ப் பெயராக மாற்றி வைத்து விட்டார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலே அவசரப்பட்டு முடிவு எடுக்காமல் மக்களுடைய எண்ணத்தைத் தெரிந்து முடிவு எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கனம் அங்கத்தினர் அவர்கள் பரங்கிமலை பற்றிக் குறிப்பிட்டார்கள். தனியாகக் கேள்விபோட்டால் அது பற்றிச் சொல்ல முடியும். ஊர் பெயர்களை மாற்றும்போது மக்களுடைய உணர்ச்சிகளை இந்த அரசு மதிக்கிறது. அங்காங்குள்ள நகராட்சிகள் பெயரை மாற்ற வேண்டுமென்று தீர்மானம் போடுவதோடு மாத்திரமல்லாமல் பெயரை மாற்ற வேண்டுமென்று அரசு உணர்ந்தால் அரசே மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

முள்ளுவாடியிலுள்ள மேய்ச்சல் நிலம்

* 230 வின.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

1971 டிசம்பர் 10]

வட ஆர்க்காடு மாவட்டம், ஆர்க்காடு ஒன்றியத்தில் உள்ள முள்ளுவாடி கிராமத்தில் உள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தை 1970-ம் ஆண்டில் நிலம் உள்ள ஒரு தனி நபருக்கு பட்டா செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. கே. எ. வகாப்: நிலம் இல்லாத ஏழை மக்கள் பல்லாயிரக்கணக்காக நாட்டில் இருக்கும்போது இப்படி நிலம் உள்ளவர்களுக்கு நிலத்தைக் கொடுப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அரிசன மக்கள் நிலம் கேட்டு அவர்களுக்கெல்லாம் இன்னும் அளிக்கப்படாமல் இருக்கும் நிலையை மாற்றி உடனடியாக அவர்களுக்குப் பட்டா வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தப் பட்டா செய்தது தவறு என்று சொல்லி அதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தமிழகம் பூராவும் இருக்கின்ற மேய்ச்சல் புறம்போக்கைத் தனி நபர்கள் ஆக்கிரமித்து கொள்ளுகிறார்கள். ஆங்காங்கு மேய்ச்சல் புறம்போக்கு எந்த அளவுக்கு விடப்படவேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும், கால்நடைகளின் எண்ணிக்கை என்ன என்பதை எல்லாம் கணக்கிட்டு மேய்ச்சல் புறம்போக்கு நிலங்கள் ஒதுக்கி பாதுகாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மேய்ச்சல் புறம்போக்கைப் பட்டா செய்வது கிடையாது. மேய்ச்சல் புறம்போக்கை சாதாரண புறம்போக்காக ரீ-க்ளாசிபிகேஷன் செய்த பிறகுதான் பட்டா செய்து கொடுக்க முடியும். ஆக்கிரமிப்புப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ஆக்கிரமிப்பு இருந்தால் அகற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

New Chambers in High Court

*231 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether new law Chambers are to be constructed inside the compound of the Madras High Court; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஆம்.

உயர்நீதி மன்றக்கட்டிட எல்லைக்குள் வழக்கறிஞர்களுக்கான கூடுதலான அறைகளை கட்டுவதற்கான ஒரு திட்டத்தை அரசு அங்கீகரித்துள்ளது. இத்திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும். இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத்தொகை ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பத்தாறாயிரம் ஆகும்.

THIRU N. DENNIS: Regarding the allotment of new chambers, may I know from the Hon. Minister whether juniors and seniors will be considered alike?

THE HON. THIRU S. MADHAVAN: That will be decided by the High Court.

THIRU M. A. LATHEEF: In view of the difficulties experienced by advocates like me, I would like to know from the Hon. Minister when the buildings would be completed? Will it be completed at least this year?